DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.56/2022

Prosecution witness for P.W. 4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. லிங்கவேல் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2024.**

Accused NBW pending (As per order in Crl.M.P.No. 4018/2022 evidence recorded in the absence of the Accused)

**<u>முதல் விசாரணை</u>**

நான் வடக்கு உடைபிறப்பு என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தான்குளம் மணிநகரில் உள்ள டாஸ்மார்க் பாரில் வேலை செய்கிறேன். எனக்கு வேலை நேரம் மதியம் 12.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை. 04.07.2016 அன்று எங்கள் ஒயின் ஷாப்பிற்கு சந்தேகப்படும்படி 3 பேர் வந்தார்கள். பாரில் உள்ள பாட்டிலை வெளியே கொண்டு போக முடியாது, அதனால் திரும்ப தந்து விட்டு, நீ பெரிய மயிரு பார் வைத்திருக்கிறாய் என்று அசிங்கமாக திட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அவர்கள் கருப்பு கலர் பல்சர் பைக்கில் வந்தார்கள். வருடம் ஆகியதால் நம்பர் ஞாபகமில்லை. காலையில் 11.00 மணிக்கு உச்சிகுடியிருப்பு கோவில் காவலாளி கொலைசெய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன். கொலை செய்யப்பட்ட இடத்திற்கு சென்று பார்த்தபோது, கோவிலின் கேட் உடைக்கப்பட்டிருந்தது, கோவில் உண்டியலும் உடைக்கப்பட்டிருந்தது. காவலாளி முத்துவை கழுத்தில் பாவாடை நாடாவை சுற்றியும், கை, கால்கள் நைலான் கயிறாலும் கட்டப்பட்டிருந்தது. வாயில் சேலை துணியால் அடைக்கப்பட்டிருந்தது. இறந்துபோன காவலாளி முத்து ஆணுறுப்பு சிதைக்கப்பட்டு விந்தணு வெளியே வந்தபடி இருந்தது. காயங்கள் உச்சியிலும், கன்னத்திலும், உடம்பு முழுவதும் இரத்தக்காயங்கள் இருந்தன. முத்துவுடன் மூக்கம்மாள் பாட்டி என்ற ஒருவர் உடன் இருந்தார். அவரையும் கட்டப்பட்டு அவரின் வாயிலும் துணியால் கட்டப்பட்டு முனங்கல் சத்தத்துடன் இருந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து வாயிலிருந்த துணியை எடுத்து மூக்கம்மாள் பாட்டியை காப்பாற்றினார்கள். பின்னர் 5 மாதங்கள் கழித்து பிப்ரவரி மாதம் என்னை போலீசார் கூப்பிட்டார்கள். காவல்நிலையத்தில் வைத்து 2 பேரை அடையாளம் காண்பித்தேன். அந்த நபர்களின் பெயர், விவரம் அப்போது எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. அவர்களை நீதிமன்றத்தில் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் வருடம்

ஆகிவிட்டதால் உறுதியாக சொல்லமுடியாது. காவல்நிலையத்தில் கருப்பு கலர் இருசக்கரவாகனத்தின் போட்டோ காண்பித்தார்கள். கருப்பு கலர் பைக் என்று சொன்னேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District & Sessions Judge,
Thoothukudi(FAC).